# ‘ஒபரேஷன் பலவேகய’வில் 8000 துருப்பினர்

(கொழும்பு)
ஆனையிறவு முகாமில் சிக்கியுள்ள 800 ராணுவத்தினரையும் மீட்க ‘ஒபரேஷன் பலவேகய’வில் 8000 படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
‘ஒபரேஷன் பலவேகய’வின் இறுதித்தாக்குதலை படையினர் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளதாகவும், இதில் முப்படையினரும் ஈடுபடுத்தப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 14 இதழ்: 169
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30-7-1991

## அம்பாறை கண்ணியில் கவச வாகனம் தகர்ப்பு

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோயில் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் கவசவாகனமொன்று முற்றுகச்சேதமடைந்துள்ளது.
நேற்று முன்தினம் திருக்கோயில் இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்களில் வெளியேறி வந்த விசேட அதி

(4ம் பக்கம் பார்க்க)

## 13 சிப்பாய்கள் பலி

### 48 பேர் படுகாயம்

[கொழும்பு]
ஆனையிறவு முகாம்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யுத்தத்தில் 13 படையினர் கொல்லப்பட்டும், 48 சிப்பாய்கள் படுகாயமடைந்ததாகவும் அரசு தரப்பில் தெரி

[4ம் பக்கம் பார்க்க]

# ★ ஆனையிறவை மீட்பதற்கு படையினரை அதிகரிக்குமாறு ராணுவ தளபதிகள் கோரிக்கை!

(லண்டன்)
ஆனையிறவை மீட்க தரையிறக்கப்பட்ட படையினர் புலிகளின் பெரும் எதிர்ப்பை சந்தித்து இழப்புகளை சந்தித்ததால் படையினரின் தொகையை அதிகரிக்குமாறு இராணுவ தளபதிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக நேற்றுக்காலை பி. பி. ஸி. தெரிவித்தது.

பி. பி. ஸி.யின் செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கையில்; முதலில் 2000 படையினர் தரையிறக்கப்பட்டு நகர முயன்றனர். அது முடியாதுபோகவே மணல் வெளியில் முன்னேக்கி நகர கடற்படையினர் அழைக்கப்பட்டனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

## ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு முற்றுகைப் போருக்கு ‘ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கை’ என விடுதலைப்புலிகள் பெயரிட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தற்கொலை படை தாக்குதல் 7 இராணுவம் பலி!

(கொழும்பு)
ஆனையிறவு முகாம்பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற புலிகளின் தற்கொலைப்படைத் தாக்குதலில் 7 படையினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## காவிரிநீர் பிரச்னை வாழப்பாடி ராஜினமா தமிழக அரசும் பதவிவிலகும்?

[புதுடில்லி]
மத்திய தொழில் இணை அமைச்சரும், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவருமான திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தமது அமைச்சர் பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.
காவிரி நீர்ப் பிரச்சனை தொடர்பாக மத்திய அரசு கடைப்பிடித்து வரும் கொள்கையில் அதிருப்திகொண்டிருப்பதன் காரணமாகவே திரு. ராமமூர்த்தி ராஜினமாச் செய்ததாகக் கூறப்படுகிறது.
இதேவேளையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று பி.பி.ஸி.க்கு அளித்த

(3ம் பக்கம் பார்க்க)

## அண்மைக்கால யுத்தங்களில் சரித்திர முக்கியத்துவமிக்கது!

—‘சண்டே ரைம்ஸ்’

[கொழும்பு]
தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆனையிறவு யுத்தம் இலங்கையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற யுத்தங்களில் ஒரு சரித்திரமுக்கியத்துவம்வாய்ந்த இடத்தை வகிக்கிறது.

கொழும்பிலிருந்து, வெளிவரும் ‘சண்டே ரைம்ஸ்’ ஆங்கில வார இதழ் அதன் முன் பக்கச் செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.
இதேவேளையில் ஆனையிறவு யுத்தம் விடுதலைப் புலிகளுக்கு

[4-ம் பக்கம் பார்க்க]

## இந்தியா - இலங்கை புதிய ஒப்பந்தம்

(புதுடில்லி)
இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான புதிய இருதரப்பு ஒப்பந்தமொன்று நேற்று மாலை இருவெளிநாட்டு அமைச்சர்களாலும் கைச்சாத்திடப்பட்டது.
நேற்று மாலை இந்திய வெளிநாட்டமைச்சர் திரு.மாதவ்சிங்

(4ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி ஏந்திய பொம்மைகள் வியூகம்

[கொழும்பு]
மனித உருவில் அமைக்கப்பட்ட துப்பாக்கி ஏந்திய பொம்மைகள் ஆனையிறவு முகாமைச் சுற்றி வியூகம் அமைத்துள்ளதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக அரசு அறிவித்தது.
மனிதர்கள் துப்பாக்கியுடன் நிற்பதுபோல் இந்தப் பொம்மைகள் அச்சமூட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை கட்டைக்காடு வெற்றிலைக்கேணியில் உள்ள படையினர் ஆனையிறவு முகாமை நோக்கி மெதுவாகச் செல்வதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறினர்.

## இலங்கையில் தமிழ் மக்கள் பாகுபாடுடன் நடத்தப்படுவதாக அரசு பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறது

கொழும்பு)
இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் பாகுபாட்டுடன் நடத்தப்படுவதை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.
ஜனதிபதி ஆர். பிரேமதாசாவே இதனை ஒப்புக்கொண்டுள்ளார்.
இலங்கையில் தமிழர்கள பாகுபாட்டுடன் நடத்தப்படுவதாக இலங்கை அரசுத் தலைவர்கள் ஒத்துக்கொள்ள மறுக்கின்ற நிலையில் ஜனதிபதி

(4ம் பக்கம் பார்க்க)

## புல்லாவெளியில் 2 பவள் கவசவாகனம் அழிப்பு

[யாழ்ப்பாணம்]
புல்லாவெளிப் பகுதியில் நேற்று நடைபெற்ற மோதலில் இரு பவள் கவச வாகனங்கள் புலிகளினல் தகர்க்கப்பட்டதுடன் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக களத்திலிருந்துவரும் செய்திகள் தெரிவித்தன.
நேற்று பிற்பகல் 1-30 மணியளவில் விமானப் படையினரின் உதவியுடன் நகரமுயன்ற படையினரை முன்னேறவிடாது புலிகள் தாக்தல் நடத்தினர்கள்.
இரு பகுதியினருக்குமிடையே நேற்றுக் காலை தொடக்கம் கடுமையான மோதல் இடம்பெற்றது.
படையினருக்கு உதவியாக பொம்மர், அவ்ரோ,

[3-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## புதிய மீரா நாவல்

இனவிடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள். சிறுவர்களுக்கு ''இராவணன் கோட்டை'' இன்னும் உயிரோட்டமான பத்து ''மீரா நாவல்கள்'' விற்பனையாகின்றது. (சி-5041)

## ஆங்கிலம்

ஆங்கிலம் நன்ருகப் படிக்க வாசிக்க எழுதத் தெரிய வேண்டுமா? அல்லது வேலையில் உள்ளவர்களுக்கோ, வெளிநாடு செல்பவர்களுக்கோ ஆங்கிலம் ஒரு தடையாக இருக்கிறதா? வீடுகளுக்குச் சென்று பாடம் சொல்லிக் கொடுக்கப்படும். ஆண்டு 8 தொடக்கம் O/L பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். காலை 9-00 தொடக்கம் 12-00 வரை நேரில் தொடர்பு கொள்ளவும். கே. சோமசுந்தரம் C/O எஸ். செல்லத்துரை புதுமதவடி, சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (சி-5042)

## புலமைப் பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாதிரிப் பயிற்சிகள் (8 வினுத்தாள்களைக்கொண்டது.) விற்பனைக்குண்டு. 28-07-91, 04-08-91ம் திகதி பரீட்சை வினுத்தாள்களைப் பெற்று விடைகளை எழுதித்தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5043)

## மே. இந்தியா வெற்றி

(லண்டன்)

மே. இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் ''ஏவஸ்டனில்'' நடைபெற்ற 4-வது டெஸ்ட் போட்டியில் மே. இந்தியா 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

மே. இந்தியக் கோஷ்டி இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு 152 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது 2வது இன்னிங்ஸை ஆடத் தொடங்கியபோது, இங்கிலாந்து கோஷ்டியின் அதிவேகப் பந்து வீச்சு வீரர் பிலிப்பின் 7 பந்து வீச்சில் மே. இந்தியக் கோஷ்டியின் ஆரம்ப ஆடுப்பாட்டக்காரர்

[4ம் பக்கம் பார்க்க]

# வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி

(நாவற்குழி)

ஆனையிறவு, வெற்றிலைக் கேணி போர்முனையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி எமது வெற்றிக்கு வித்தாக விழுதுவிட்ட வீரமுத்துக்களான வீரமரணத்தை தழுவிக் கொண்ட போராளிகளான அல்பேட் (கந்தசாமி வன்னியசிங்கம், மட்டுவில் வடக்கு), பெண்போராளி மதனு (தளையசிங்கம் சிவமலர், கைதடி, நுணுவில்) பாரதி (நவரத்தினம் கோபாலபிள்ளை, மட்டுநகர்), கரன் (வேலாயுதம் சிவனையா, மூதூர், திருமலை) ஆகியோரது புகழுடல்கள் தென்மராட்சி பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது.

அஞ்சலிக்கூட்ட முடிவில் மாவீரர்களின் புகழுடல்கள் புலிகளின் இராணுவ அணி வகுப்பு மரியாதையுடனும், பாண்ட் வாத்திய சகிதம் கொடிகாமம் மாவீரர் மயானத்தில் புலிகளின் மரியாதை வேட்டுக்கள் முழங்க தீயுடன் சங்கமானது. [107]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

# திட்டமிடல் அதிகாரி

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையோர் 12-08-91முன் விண்ணப்பிக்கவும். இதற்கானநேர்முகப்பரீட்சை 17-08-91(9-00 மணிக்கு) இப்பணிமனையில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பெயர்ப் பட்டியல் பணிமனை விளம்பரப் பலகையில் 15-08-91ல் வெளியிடப்படும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
இலங்கை செ. சி. சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

73, கண்டி வீதி.
யாழ்ப்பாணம்.
27-07-1991

(ஏ-1466)

## அமைய சுத்திகரிப்பு தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

மேற்படி பதவிக்கு பின்வரும் தகைமைகள் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன; விண்ணப்பங்களை 10-08-1991 அன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ எமக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பதவி முற்றிலும் அமைய அடிப்படையில் அமைந்ததாகும்.

கல்வி மற்றும் தகைமைகள்:

(1) வயதெல்லை 18 லிருந்து - 40 வரை
(2) 7ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பணிப்பாளர்.

போதனு வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
29-07-91.

(ஏ 1465)

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் சாவகச்சேரி

# மஹோற்சவ விழா

(கொடியேற்றம்)

அன்புடையீர்!

நாளை கொடியேற்றம் 31-7-91 புதன் காலை 7 மணி முதல் 11 மணிக்குள்
சித்திரத்தேர் 8-8-91 வியாழன் காலை 7 மணி முதல் 11 மணிக்குள்
தீர்த்தத்திருவிழா 9-8-91 வெள்ளி காலை 7 மணிமுதல் 10 மணிக்குள்
ஆடிப்பூர விழா (108 தீபபூஜை) 12-8-91 திங்கள் பி. ப. 3 மணிக்குள்

இம்மஹோற்சவ விழா 10 நாட்கள் நடைபெறும். இக்காலங்களில் அனைவரும் வருகைதந்து அன்னை அருள்பெறுக.

இங்ஙனம்
ப. மஹாகணபதிசர்மா
(ஆலயதர்மகர்த்தா)

இவ்விழா சிறப்பாக நடைபெற அன்னையைப் பிரார்த்திக்கிறோம்.

தேவி றேடர்ஸ்
மருதடி றோட்
சாவகச்சேரி வடக்கு மீசாலை.

(சி-5032)

# இராசி பலன்

30-07-1991
(தமிழ்த்திகதி ஆடி 14)
செவ்வாய்க்கிழமை

சதுர்த்தி பி. இ. 4-09வரை, சதயம காலை 7-10 வரை, இராகுகாலம் மாலை 3-03 முதல் 4-33 வரை, சுபநேரம் காலை 10-33 முதல் 12-03 வரை, சங்கடஹர சதுர்த்தி விரதம்.

மேடம்: தொழில் பகை, குடும்ப விரோதம், மனச் சஞ்சலம்.

இடபம்; அதிக பிரயாசம், தொழில் லாபம், விரும்பிய பயணம்.

மிதுனம்: மாமனுர் உதவி, மனக்களிப்பு, பண வரவு.

கடகம்: பணியாள் துன்பம், கடன் சுமை, கடும் சினம்.

சிங்கம்: உறவினர்தொல்லை, அகம்பாவம், அலைச்சல்.

கன்னி: தயாளகுணம், மன நிறைவு, தொழில் பாராட்டு.

துலாம்: விருந்தோம்பல், அயலவர் உதவி, குடும்ப மகிழ்ச்சி.

விருச்சிகம்: தொழில்பிணக்கு இனசன வருகை, அகால போஜனம்.

தனுசு; நண்பர் பகை, காரிய தாமதம், கடன்தொல்லை.

மகரம்: விரும்பியது நிறைவேறல். பயணம், குடும்பசுகம்.

கும்பம்; கருத்துவேற்றுமை, பெண்தொல்லை, மனச்சுமை.

மீனம்; தொழில் சிறப்பு, காரியச்சித்தி, புத்திரர் பெருமை.

- ஜோஸ்யர்

# 120ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி பத்மநாதன் மதுரம்

தோற்றம்: 20-01-1946 அழிப்பு: 3-4-1991

திதி: சதுர்த்தி (30-07-1991)

''உள்ளச் சமநிலையே சாந்தத்தின் பிறப்பிடம்''
- கீதை

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றேன்.

திரு. மீனுட்சிசுந்தரம் பத்மநாதன்(கணவன்)

பிள்ளைகள்: செல்வன் ஸ்ரீஜெகன்
செல்வன் ஸ்ரீசுதன்

வாசிகசாலை வீதி,
ஏழாலை மத்தி, ஏழாலை.

(சி 5040)

# 1-ம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



## திருமதி தங்கம்மா கார்த்திகேசு

மண்ணில்: 06-02-1912 விண்ணில்: 12-07-1990

திதி: 30-07-1991

குடும்பத்தின் குலவிளக்காய் . எம்
குலம் காத்த சுடர்விளக்கே
சூருவளி போல் சுழன்று வந்த துன்பமதில்
எமைக்காத்துநின்ற தாயன்பே
கல்விதனை எமக்கீந்து கற்ருேரும் மற்ருேரும்
போற்ற வைத்த உத்தமியே
தங்கத்தட்டினிலே வடித்துவைத்த சிலைபோல் எமது
இதயமதில் எழுதிவைத்த திருவுருவே
தங்கம்மா தங்கம்மா என்ற தங்கள் நாமத்தை
தரணியிலே காணேமே
தாங்கள் தந்த வாழ்வதனை நாம்பெற்று வாழ்கையிலே
பார்க்க விரும்பாமல் பரலோகம் சென்றதென்ன
ஆண்டொன்று சென்ருலும் அணையவில்லை உம்நினைவு
தங்கள் ஆத்மசாந்தி வேண்டி ஆண்டவனை
பிரார்த்திக்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

டச்சு றோட்,
உடுவில்.

(எ-1464)

# ★ 'தமிழீழ விடுதலைக்காக தோளில் துவக்கேந்த தயங்கமாட்டேன்'

## 50 வயதுப் பெண் துணைப்படையில் சேர ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

துணைப்படைப் பிரிவில் சேர்ந்துபயிற்சி பெற விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பல நூற்றுக் கணக்கில் மக்கள் முண்டியடித்துக்கொண்டு கோண்டாவில் பிரதான அலுவலகமவந்திருந்தனர்.

வந்தவர்கள் அனைவரும் உடன் பயிற்சியையும் பணியையும் தருமாறு வேண்டுதல் விடுத்தபடி நின்றனர்.

வந்தவர்களில் அநேகமானோர் தற்போதும் தத்தம் ஊர்களில் விடுதலைப் புலிகள் விடுக்கும் வேண்டுகோளுக்கிணங்கி உலர் உணவு சேகரித்தல் சாக்கு, மண்வெட்டி, பிக்கான், சவள் போன்ற உபகரணங்களை சேகரித்தல் இரத்ததானம் வழங்குதல் காயப்பட்டோரை பராமரித்தல் போன்ற பல் வேறுபட்ட உதவிகளை நல்கியபடி இருந்தவர்களே.

30 வயதிற்கு மேற்பட்டவர்களும் தமக்கு போராட்டத்தில் இன்றுஎன்ன பணியை ஆற்றலாம் என ஏங்கியிருந்தவர்களுக்கும் துணைப்படை பயிற்சி அழைப்பு ஒரு வரப்பிரசாதமாக அமைந்ததாக அவர்கள் கூறினர். பெண்களும்வயோதிபர்களும் துணைபபடை பிரிவில் சேருவதற்கு வந்திருந்தனர்.

இப்படி ஆர்வம் கொண்டு வந்தவர்களின் நோக்கம் ஆர்வம் பற்றி பயிற்சிக்கு வந்த ஒரு ஆணையும், ஒரு பெண்ணையும் எமது நிருபர் பேட்டி கண்டதை கேள்வி பதிலாக கீழே தருகிறோம்.

திரு. ஆனந்தசிவம் பட்டதாரி ஆசிரியர், நிலாவெளி மகா வித்தியாலயத்தில் இரு வருடம் கல்வி கற்பித்தவர். 28 வயது, திருமலை வசிப்படம்

கேள்வி; நீங்கள் விடுதலை புலிகளின் வேண்டுகோளை ஏற்று வந்ததற்கு ஆர்வம், தூண்டுதல் என்ன?

பதில்: நான் சிறு வயதிலிருந்தே தமிழில் ஆர்வம் உடையவன். கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தவன். என் குடும்பத்தில் நான்தான் பல் கலைக்கழகம் போய்க் கற்று ஆசிரிய தொழிலை செய்து வந்தேன். அடுத்தடுத்து வந்த இனக்கலவரங்களால் நாங்கள் கடுமையாக பாதிப்புற்ருேம். சொந்த வீடுகளையும் ராணுவம் நிர்மூலமாக்கி விட்டது. தமிழர் நிம்மதியாக வாழ வேண்டுமாயின் தமிழீழம்தான் ஒரே வழி. அதற்கு பேச்சு வார்த்தை நடத்தி பயன் இல்லை. ஒவ்வொருவரும் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும். எங்கே அழைப்பு சந்தர்ப்பம் வரும் என காத்திருந்தேன்.

கேள்வி: இதற்கு முன்னரும் ஈடுபாடு உண்டா?

பதில்: முன்பிருந்தே ரகசியமாகவும் மறைமுகமாகவும் இயக்க உதவிப் பணிகளில் ஈடுபாடு உண்டு. ஆனால் இந்திய ராணுவம் வெளியேறிய பின் முழு அளவில் சேவையாற்றிவந்தேன்.

கேள்வி: உங்கள் அபிலாசை என்ன?

பதில்: திருகோணமலை படிப்படியாக சிங்களவர் கையில் போகிறது சிங்கள குடியேற்றம் சொல்லத்தேவையில்லை. நம் பிரதேசத்தை மீட்கவேண்டும். மீண்டும் திருமலையை மீட்கும் நோக்குடன்தான் இத்துணைப் படையில் சேருகிறேன். நம் பிரதேசத்தை மீட்க யாவரும் முன்வர வேண்டும்.

அடுத்து பேட்டி தந்தவர் ஒரு பெண். இவரும் துணைப் படையில் பயிற்சிபெற வந்திருந்தார்.

திருமதி இ. வேலுப்பிள்ளை, (வயது 50) 5 பிள்ளைகளின் தாய். கணவன்ஓமானில்வேலை. ஒரு மகன் வெளிநாட்டில் 3 பேர் திருமணமாகியுள்ளனர் ஒரு மகளுடன் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார். சொந்த இடம் பொலிகண்டி. வல்வெட்டித்துறை.

கேள்வி: 50 வயது ஆகியும், பெண்ணாக இருந்தும் போராட முன்வரக் காரணமென்ன?

பதில்: விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண் போராளிகள் பலர் உள்ளனர் ஆயுதம் ஏந்துவோர் உதவி புரிவோர் என பலர் உளர். தற்போதைய போரில் வயது, பால் வித்தியாசம் தேவையில்லை சகலரும்போரிட முன்வரவேண்டும். போரிட வயது கூடிவிட்டதே என ஏங்கிய எனக்கு தற்போதைய அழைப்பு ஒரு கொடைதான்.

கேள்வி: இளம் வயதிலும் உங்களுக்கு இப்படியான ஆர்வம் இருந்ததா?

பதில்: ஆம். ஆனால் அப்போது ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகவில்லை, இருந்தும், 1982இல் நல்லூரில் எனது மகனுக்கருதிய ஒருவர் பொலிசாரால் சுடப்பட்டது; 1983ல் திருநெல்வேலி சம்பவத்தில் எனது அயலவர் பாதிப்பு: 1984ல் வல்வெட்டியில் எமது வீடு தகர்ப்பு; இவையாவும் போராட்டமே விடுதலையைத் தரும் என்ற முடிவுதந்தது. அப்போது குடும்பப்பற்று என்னை விடவில்லை. ஆனால் பாசப்பற்று என்று எல்லோரும் இருந்துவிட்டால் போராடுவது யார்? என்ற உணர்வுதூண்ட தற்போதைய அழைப்பு என்னை மகிழ்விக்கிறது.

கேள்வி: உங்கள் கணவர் நீங்கள் இப்பயிற்சி பெறுவதில் ஆட்சேபம் தெரிவிக்கமாட்டாரா?

பதில்: இல்லை என் கணவர் வேலைசெய்யும் இடம் சென்று என் விருப்பததை தெரிவித்தேன். அவர் மறுக்கவுமில்லை; அங்கு கூட தமிழர்களுக்கு நமது நிலையை உணர்த்திவந்தேன்.

கேள்வி: துணைப்படையில் உங்களால் என்ன செய்யமுடியும்?

பதில்: காயப்பட்டவர்களுக்கு உதவ முடியும், போராளிகளுக்கு உணவு நீர் உணவு வழங்கமுடியும், சந்தர்ப்பம் வருமாகில் தோளில் துவக்கு ஏந்தவும் போராடவும் தயங்கமாட்டேன்.

கேள்வி; எவ்வளவு காலம் சேவை செய்ய விருப்பம்?

பதில்: தமிழீழம் கிடைக்கும் வரை என்பணிதொடரும் என்றார். (பூ)

# ★ வடக்குக் கிழக்குப் பிரச்னை தீர்வுக்கு ஜனாதிபதி ஆலோசனை கோருகிறார்

(கொழும்பு)

''வடக்கு-கிழக்குபிரச்னை மிகவும் சிக்கலானது. இதற்கு தீர்வு, நியாயமான தீர்வொன்றைக்காண தற்போதையகால கட்டத்தில் ஜதார்த்தமான அணுகுமுறையை கடைப்பிக்கவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸா கல்கிஸையில் நடைபெற்றமதவைபவமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.''

அங்கு அவர் மேலும் பேசுகையில்; இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வழிவகைகள் குறித்து மகாசங்கத்தினரும் ஏனைய மதத்தலைவர்களும் ஆலோசனை வழங்கவேண்டும்.

வடக்கு-கிழக்கில் தமிழரும், முஸ்லிம்களும், படையினரும் உயிரிழக்கின்றனர். பேச்சு வார்த்தை மூலமே பிரச்னைக்கு தீர்வு காணமுடியும். புலிகள் ஆயுதம் மூலமே தீர்வுகாண விரும்புகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் பல தமிழ் குழுக்கள் அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப்போராடின இன்று நிலைமை மாறிவிட்டது. அனேகமான குழுக்கள் ஆயுதங்களைக்கைவிட்டு அரசியல தீர்வு காணமுயல்கின்றன- சிலகுழுக்கள் ஆயுதப்படைக்கும், பொலிசாருக்கும் உதவுகின்றன.

புலிகளின் பேராட்டத்தை இக்குழுக்கள் எதிர்க்கின்றன. தமிழ் மொழியும் இப்போது அரசகருமமொழியாக்கப்பட்டுள்ளது. தகைமை, திறமை அடிப்படையிலும் இனவிகிதாசாரப்படியும் தொழில்வாய்ப்பு வழங்கப்படுகிறது. இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, தன்னாதிக்கம் ஆகியவற்றுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வயையில் வடக்கு- கிழக்கு பிரச்னைக்கு நியாயமான தீர்வொன்றை காண்பதில் நாம் கவனத்தை செலுத்தவேண்டும்.

வடக்கே தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். கிழக்கில், தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். எனவே இப்பிரச்னை சிக்கலானது. இதனாலேயே சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது என்றார். (சி)

# சென்ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்களுக்கு ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''சாவகச்சேரி முதல் முகமாலை வரை வீதி ஒழுங்கு சேவையில் ஈடுபட்டுவரும் சென்ஜோன் அம்புலன்ஸ் பிரிவு தொண்டர்களும் அவர்களின் பொறுப்பாளர்களினால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய பணியாற்ற வேண்டும்.''

யாழ். மாவட்ட சென்ஜோன் அம்புலன்ஸ் மாகாண ஆணையாளர் திரு. சுகந்தன் இன்னாசித்தம்பி விடுத்த வேண்டுகோளில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வேண்டுகோளில்மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கடமைக்கு செல்வோர் நேரம் தவறாமை, கடமையில் ஒழுங்கு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

தற்போது பயிற்சியில் ஈடுபடும், மீள் பயிற்சிபெற்று முடித்து சான்றிதழ் பெற்றுள்ளோர், இதுவரை எம்முடன் தொடர்பு கொள்ளாவிடின் தற்பொழுது ஏற்பட்டுள்ள அவசர சூழ்நிலையை உணர்ந்தும் தேவைப்படும் பெருந்தொகையான தொண்டர்களின் தேவையை உணர்ந்தும் உங்கள் பிரிவு அத்தியட்சகர்கள் மூலமாக பிரதேச ஆணையாளர்களுடன் உடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

இன்றைய காலகட்டத்தின் தேவைகளை உணர்ந்து மனித நேய கடமை புரிவதன் மூலம் ஸ்தாபனத்தின் பெயரை மங்காமல் பாதுகாப்பது உங்கள் கடமையாகும்.

# ஆயுதங்களைஏந்தி யுத்தமுனைக்கு செல்லும் மனோநிலையை மாணவர் பெற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

'வீரமரணமடைந்த போராளிகளினதும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் இன்று ஏராளமாக எமது முகாம்களில் கிடக்கின்றன. இந்த ஆயுதங்களை ஏந்தி யுத்தமுனைக்குச் செல்லும் மனநிலையை மாணவர்கள் பெற வேண்டும்என விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பொறுப்பாளர் திரு. வே. அரவிந்தன் கூறினார்'.

கடந்த வெள்ளிக்கிழமை அச்சுவேலி, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் நடந்த விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான போர்க்கால கருத்தரங்கில் உரையாற்றுகையில் அரவிந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: வடதமிழீழத்தில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு சிறிலங்கா இராணுவத் தளத்தின் மீது நாம் பாரிய முற்றுகைத் தாக்குதலை நடாத்திக்கொண்டிருக்கின்ருேம். எதிரியானவன் தன் முழுப்பலத்தையும் பிரயோகித்து இதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயல்கின்ருன். இந்த வரலாற்றுப் போரை சர்வதேச நாடுகள் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன. இந்தமுற்றுகைப்போர் வெற்றி பெறத் தேவையான முழுமையான பங்களிப்பை அனைவரும் ஆற்ற முன்வரவேண்டும்.

யுத்த முனைக்குச் சென்று இராணுவ நடவடிக்கைகளில் நேரடியாக உதவவும, காயமடைந்த போராளிகளை பராமரிக்கவும், அவசிய தேவைகள் ஏற்படும்போது தேவையான பொருட்களை சேகரித்துத் தரவும் நீங்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும். வல்வெட்டித்துறையில் மீண்டும் வல்வை படுகொலை போன்றதோர் நிகழ்வு நிகழாமல் இருக்க வீட்டிற்கொருவர் புலிகளுடன் இணைந்து ஆயுதமேந்தி போர்க்களம சென்று போராடவேண்டும். தமிழீழத்திலுள்ள அனைத்துமாணவர்களும் அர்ப்பண உணர்வுடன் கரும்புலிகள் போல் செயலாற்றினால்தான் நாம் எமது இலட்சியத்தின் இலக்கினை விரைவில் அடைய முடியும். இன்று எமது கரும்புலித் தாக்குதலினால் சிங்கள அரசு கிலி கொண்டுள்ள அதே வேளை இத்தாக்குதலைக்கண்டு உலகமே வியந்து நிற்கின்றது.

## புல்லாவெளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகொப்டர்கள் உட்பட கடற்பகுதியிலிருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

மும்முனைத் தாக்குதலை எதிர்கொண்ட புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலை நடத்தினார்கள் இதனால் இரு பவள் கவச வாகனங்கள் முற்ருகத் தகர்க்கப்பட்டதுடன் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் நேற்று மாணவர்கள் முண்டியடித்துக் கொண்டு இரத்தானம் செய்தனர்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி உட்பட மூன்று கல்லூரிகளின் மாணவ, மாணவிகள் உட்பட பொதுமக்கள் பலரும் இரத்த தானம் செய்தனர். மேலும் பலர் இரத்ததானம் செய்வதற்கு தமது பெயர்களைப் பதிவுசெய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (56)

## ஆனையிறவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தாக்குதலில் அதுவும் முறியடிக்கப்பட்டது. பின் படையினர் தொகை 4000 மாக அதிகரிக்கப்பட்டது. முன்னேறும் முயற்சி மிக மந்தமாகவே இருந்தது. படையினரால் சில நூறு மீற்றர் தூரமே நகர முடிந்தது படையினருக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது.

முன்னேற்ற நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டு முதலில் தரையிறககப்பட்ட 4000படையினரும் வெளியேற்றப்பட்டு புதிதாக 4000 படையினர் தரையிறங்கினர். மேலும் படைத்தளபதிகளின் வற்புறுத்தலின் பேரில் தற்போது 8000 படையினர் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

படையினருக்கு உதவியாக விமானப்படையின் முழுப்பலமும் பிரயோகிக்கப்படுவதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

## பீரங்கி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் திருவடி நிலை, சமவில்துறை ஆகிய பகுதிகளை நோக்கி கடலில் ரோந்து சுற்றும் சிறிலங்கா கடற்படையின் அதிவேக விசைப்படகுகள் பீரங்கித் தாக்குதல்களை அடிக்கடி நடத்துகின்றன.

## காவிரிநீர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியில் கூறியதாவது:

காவிரி நீர்ப் பிரச்சனை தொடர்பாக திருப்தியான தீர்வு கிடைக்காத பட்சத்தில் தமிழ்நாடு அரசு ராஜினமா செய்வதே கடைசியாக நாம் பயன்படுத்தப் போகும் ஆயுதமாக இருக்கும் என்றார்.

# ஈழத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகள் என்பதனை நிரூபிக்க ஜனாதிபதி பிரேமா அழைப்பு!

(கொழும்பு)

ஈழத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்பதனை நிரூபிக்குமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

பிற தமிழ் குழுக்களெல்லாம் போராட்டத்தைக் கைவிட்ட நிலையில் விடுதலைப்புலிகள் மட்டும் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருவதனையிட்டு ஜனாதிபதி வியப்புத் தெரிவித்தார்.

கோயம்புத்தூர் சம்பவம்:

## கொல்லப்பட்டவர் சிவராஜனின் நெருங்கிய நண்பராம்

[சென்னை]

கோயம்புத்தூரில் வெடிகுண்டு சம்பவத்தில் உயிரிழந்த இருவரில் ஒருவர் ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாக தேடப்படும் சிவராஜனின் நெருங்கிய நண்பரான டிக்ஸன் என்று பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கோயம்புத்தூரில் ஒரு வீட்டில் குண்டு வெடித்தபோது ஈழத்தமிழ் இளைஞர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவர் கொல்லப்பட்டது தெரிந்ததே. [மா]

## தட்டெழுத்தில் உலக சாதனை

(புதுடில்லி)

இந்தியாவைச் சேர்ந்த பள்ளிக்கூட மாணவர் ஒருவர் ஆங்கிலத் தட்டெழுத்தில் புதிய உலகச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

13 வயதான இந்த மாணவரது தட்டெழுத்து வேகம், நிமிடத்திற்கு 514சொற்களாகும். இவர் தட்டெழுத்தில் உலக சாதனையை ஏற்படுத்தி, கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவுசெய்துள்ளார். [மா]

## பொம்மர் சாகஸ விளையாட்டு!

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடலில் மூன்று பொம்மர் விமானங்கள் கடந்த வாரம் சாகஸ விளையாட்டுக்களை நடத்தியதாக அங்கிருந்து வந்த ஒருவர் கூறினார்.

வடபகுதியில் நடைபெறும் யுத்தச்செய்திகளை மறைப்பதற்காகவே பொம்மர் விளையாட்டுக்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சோலங்கியும், இலங்கை வெளிநாட்டமைச்சர் திரு. ஹரோல் ஹேரத்தும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியபின் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சகல துறையிலுமான இருதரப்பு ஒத்துழைப்பு குறித்த பல அம்சங்களடங்கிய ஒப்பந்தம் இதுவாகும். 1987-ம் ஆண்டும் இதேதினம் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (சி)

## அண்மைக்கால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு முக்கியமான யுத்தம் என்றும் யுத்தங்களுக்கு எல்லாம் இது தாயான யுத்தம் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்திருப்பதாக வடபகுதி தளபதி ஜெனரல் டென்சில் கொப்பகடுவ கூறியிருப்பதாகவும், அத்துடன் இந்த யுத்தத்தை எதிர்கொள்வதற்கு இராணுவம் தயாராக இருப்பதாகவும் கொப்பகடுவ கூறியிருப்பதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (மா)

## ஒபரேஷன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளதாகவும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

படையினருக்கு தேவையான இராணுவ தளபாடங்களும், உணவுப் பொருட்களும், ஆயுதங்கள், வெடிமருந்துகளும் போதியளவு தரையிறக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். (சி)

## மே. இந்தியா

(2-ம் பக்கத் தொடர்ச்சி]

கள்மூவர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதன்பின் துடுப்பெடுத்தாடிய மே. இந்தியக் கோஷ்டியின்காப்டன் விவியன் றிச்சட்சனும், கால் கூப்பரும் சோடிசேர்ந்து மின்னல் வேகத்தில் ஆட்டமிழக்காது 133 ஓட்டங்களைப் பெற்றது சிறப்பம்சமாகும்.

மேற்படி இருகோஷ்டிகளின் ஐந்து டெஸ்ட் போட்டித் தொடரில் மே. இந்தியா 2-1 என்ற அடிப்படையில் முன்னணி வகிக்கின்றது. 5-வது இறுதி டெஸ்ட் போட்டி அடுத்தமாதம் 8-ம் திகதி "ஒவல்" மைதானத்தில் நடைபெறும். (வி)

# உணவு கப்பலை அனுப்புவதாக அரசு பேச்சளவிலே கூறுகிறது

- அரச அதிபர்

[யாழ்ப்பாணம்]

''இன்றைய போர்க்கால சூழ்நிலையில் ஓர் அளவு உணவாகிலும் கையிருப்பில் இருந்தால்தான் திடீரென அகதிகளாக இடம்பெயர்ந்து வரும் பொதுமக்களுக்கு ஒருநேர உணவாகிலும் வழங்கமுடியும்''

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. க.மா. மாணிக்கவாசகர் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

வடக்குப் பகுதிக்கு உணவுக் கப்பல்களை அனுப்புவதாக அரசு பேச்சளவில் கூறுகின்றதேயொழிய உருப்படியாக உணவுப் பொருட்களை அனுப்புவதில்லை. அப்படி உணவுப் பொருட்களுடன் வரும் கப்பல்களும் திடீரென பிறப்பிக்கப்படும் ஊரடங்குச் சட்டத்தினால், உணவுப் பொருட்களை முழுதாக இறக்காமல் திரும்பிச்சென்று விடுகின்றன. இதனால் போதிய அளவு உணவு கையிருப்பில் இல்லாததினால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகிவருகின்றது.

கையிருப்பில் இருக்கும் சொற்ப உணவுப் பொருட்களை இருட்டை இலவசஉணவு நிவாரணத்துக்கு வழங்கிவிட்டால் விரைவில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும் போதியளவு உணவு வந்தபின்பு நிவாரணம் வழங்குவதே நல்லது என்றார். [வி]

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் ஆனையிறவு நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளிகளான சசி (மாணிக்கராஜா சிவகுமார், விளாங்குளம், திருமலை), காட்மன் (கோணலிங்கம் சுரேஸ்வரன், பாரதிபுரம், திருமலை), வாணன் (நடேசு ஜெயக்குமார், உரும்பிராய்), துரை (சிங்கராஜா மனோகர், தம்பலகாமம்), மாலவண்ணன் (விஜயதாஸ் விஜயபாலன், (பாரதிபுரம், திருமலை), தமிழ்ச்செல்வன் (மாசிலாமணி நிரஞ்சன் [ திருமலை] ஆதவன் (சிவலிங்கம் சிவநாதன், பூநகரி, திருமலை), முரளி (எட்வின் சிறி, மாங்கேணி, மட்டு நகர்), நரேஷ் (எட்வேட் குணசூரியர், பண்டத்தரிப்பு), சந்திரன் (முருகேசு ராஜேஸ்கண்ணன், கல்லடி, மட்டுநகர்), அனுஷா (ஜெகுந்தா குமாரசுவாமி, ஏழாலை) ஆகியோரின் புகழுடல்கள், மக்கள் அஞ்சலிக்காக இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அதன் பின்னர் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் திரு. ரஞ்சன்மாஸ்டர், குகதாஸ்மாஸ்டர், தனபால், ரூபலதா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். பின்னர் போராளிகளின் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. (மா)

★ ★ ★

ஆனையிறவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளரான சுரேஷ் (கொலனி நாவற்குழி) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மா)

## 13 சிப்பாய்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

முகாம்மீது புலிகள் ரொக்கட், மோட்டார், பசிலன் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தற்போதும் கடும் யுத்தம் இப்பகுதியில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10ம திகதியிலிருந்து இதுவரை 140 படையினரே கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

2-ம் தவணை விடுமுறைக்காக

# வெள்ளிக்கிழமை பாடசாலைகள் மூடப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் 2ம் தவணை விடுமுறைக்காக ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை மூடப்படும்.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

முடிவுறாத 2ம் தவணைப் பரீட்சைகள் யாவும் 3ம் தவணை ஆரம்பத்தில் நடைபெறும்.

இழந்த பாடசாலை நாட்களை ஈடுசெய்யும் வகையில் 3ம் தவணையில் பதில் பாடசாலை நாட்களைக் கோட்டக் கல்வி அதிகாரியின் அனுமதியுடன் நடத்துவதற்கு ஒழுங்குசெய்யுமாறு அதிபர்கள் கேட்கப்படுகின்றார்கள் என்றார். [152]

## ஆகாய கடல்வெளி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 10ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவநடவடிக்கையில் நேற்று 19வது நாளாக நகரமுற்பட்ட படையினரை நகரவிடாது புலிகள் தொடர்ந்து தாக்குதல்நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் ஆனையிறவு முகாமிலிருந்து நாலு மைல் தூரத்திற்கப்பால் படையினர் நிற்பதாகவும், முன்னேற முயலும் போதெல்லாம் புலிகள் மிக உக்கிரமாகத் தாக்குதல் நடத்துவதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் இப்பகுதியில் கடும் மோதல் நடைபெற்று வருவதாகவும் இராணுவ அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்தனர். (சி)

## இலங்கையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரேமதாசா முதல்முறையாக அதுவும் வெளிப்படையாக இதனை ஒத்துக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரடிப்படையினர் மீது கஞ்சிக்குடியாறு என்னுமிடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்கள்.

இத்தாக்குதலில் கவசவாகனம் ஒன்று முற்றுகச் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கொப்பேகடுவ கருத்து நிராகரிப்பு

[லண்டன்]

ஆனையிறவுப் போர், தமிழீழப் போராட்ட முடிவின் ஆரம்பப் போர் என்று சிறிலங்கா இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ தெரிவித்த கருத்தைச் சர்வதேச அவதானிகள் நிராகரித்துள்ளனர்.

கூடுதலான துருப்புகள் ஆனையிறவை எட்டும்போது இராணுவ முகாமின் நிலைமை எப்படி இருக்கும்; அதனை எவ்வளவு பகுதியிருக்கும் அல்லது அங்கு இராணுவப் பிரிவு ஒன்றை வைத்திருப்பது சாத்தியமாகுமா என்று தற்போது கூறமுடியாது இருப்பதாகவும் சர்வதேச அவதானிகள் மேலும் தெரிவித்தனர்.

# நரசிம்மராவ் - ஹேரத் பேச்சுவார்த்தை

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவை நேற்று மாலை இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு. ஹரோல் ஹேரத் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினார்

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி பிரேமதாஸா அனுப்பிய விசேட கடிதமொன்றையும் திரு. ஹேரத் பிரதமர் நரசிம்மராவிடம் கையளித்தார்.

இலங்கை பிரச்சனை குறித்தும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்தும் தமிழகத்தில் புலிகளின் நடமாட்டம் குறித்தும் இருவரும் ஆலோசித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# வடக்கு உணவு விநியோகம் 3வாரங்களாக தடை

(லண்டன்)

வடபகுதிக்கான உணவு விநியோகம் கடந்த மூன்று வாரங்களாகத் தடைப்பட்டுள்ளதாக 'சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள்' தெரிவித்துள்ளன.

வடபகுதியில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுலிருப்பதால் இப்பகுதிக்கு உணவுப்பொருள் அனுப்புவதையும் அரசு தடை செய்துள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

வடக்கே பொருள்களின் விலை மிகவும் உயர்ந்துள்ளதாகவும் மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் இச்செய்திகள் தெரிவித்தன. (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/189389/81